# ஹரோ தமிழ் பாடசாலை பேச்சுப் போட்டி 2024

## ஆண்டு - 6 (Year 6)

### 1/09/2013 - 31/08/2014 பிறந்தவர்கள்

(ஹரோ தமிழ்ப் பாடசாலையின் தமிழ் வகுப்பு மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர்)

போட்டி நடைபெறும் திகதி 09/11/2024

நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது

## தன்னம்பிக்கை

தன்னம்பிக்கை என்றால் என்ன? "என்னால் இச்செயலை செய்து காட்ட முடியும்", என்று ஒருவர் தன் ஆற்றலில், திறமையில் வைத்திருக்கும் நம்பிக்கையே தன்னம்பிக்கையாகும். இது சிறுவர் முதல் பெரியவர் வரை எல்லோருக்கும் இருக்க வேண்டிய ஒரு பண்பாகும். இது இருந்தால்தான் உலகில் செயற்கரிய செயல்களைச் செய்ய முடியும்.

தன்னம்பிக்கை இல்லாவிடில் சிறு செயல்களைச் செய்வதற்கும் தயக்கம், பயம், கூச்சம் இருக்கும். இதுவே தொடரும்போது வாழ்க்கையில் பிடிப்பு இல்லாமல் தாழ்வு மனப்பான்மை ஏற்படும். இதனை சிறுவயதிலேயே தவிர்க்க முயலவேண்டும்.

எப்படித் தன்னம்பிக்கையை வளர்த்துக்கொள்ளலாம்? நாம் பெறும் சிறுசிறு வெற்றிகளுக்கும் நாமே பாராட்டுத் தெரிவித்துக் கொள்ளலாம். எம்மால் எதனையும் வெற்றிகரமாகச் செய்யமுடியுமெனக் கூறிக்கொள்ளலாம். பெற்றோர், ஆசிரியர்கள், பெரியோர், நண்பர்கள் வாழ்த்தும் போது அதிலிருந்து ஊக்கம் பெறலாம்.

கிடைக்கும் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி நமக்கு நாமே சவால் விட்டு காரியங்களைச் செய்ய முன்வரவேண்டும். உதாரணமாக, மேடையேற கூச்சப்படுவோர் திருக்குறள், பேச்சுப் போட்டிகளில் கலந்து கொண்டு மேடையேறி தமது வாக்குவன்மையையும், பலருக்கு முன்னால் கதைக்கும் திறமையையும் வளர்த்துக் கொள்ளலாம்.

ஆர்வத்துடன் கலந்து கொள்ளும் போது அரைப்பங்கு வெற்றி கிடைத்துவிடும். அத்துடன் விடாமுயற்சியும், தோல்வியை வெற்றியின் முதற்படியென எடுத்து முன்னேறிச் செல்வதும், பொறுமையும் இருந்தால், நீங்களே வெற்றியாளர்கள்! உலகில் உயர்நிலை அடைந்தோர் அனைவரும் பல தோல்விகளைக் கடந்து விடாமுயற்சியுடன் செயற்பட்டவர்களே. அவர்களை அந்நிலைக்கு உயர்த்தியது அவர்களது தன்னம்பிக்கையே!